வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.221/20

வழக்கு சாட்சி - அ.சா.4

| | |
|---|---|
| பெயர் பாண்டியம்மான் | ஜாதி |
| தந்தைபெயர் | தொழில் |
| கிராமம் | சமயம் |
| தாலுக்கா | வயது |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.06.23

**(** எதிரி ஆஜர்**.)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ஜவஹர்லால் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் மாடு வைத்து தொழில் செய்துவருகிறேன். அசா1 முருகன் எனது தம்பி. எதிரி எனது உறவினர். சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் தேதி, மாதம் சரியாக ஞாபகம் இல்லை. நான் எனது வேலை முடித்து திரும்பி வந்துக்கொண்டிருந்த போது முருகனை இரத்தகாயத்துடன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுக்கொண்டிருந்தார்கள். வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக்கோரப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.**

அசா1 க்கும் எதிரிக்கும் ஏற்கனவே சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றும், கடந்த 29.5.20 அன்று இரவு சுமார் 8 மணியளவில் அசா1 , அவரது மனைவி முருகேஷ்வரி மற்றும் அவரது மகள் முத்து லோகேஷ்வரி ஆகியோர் அவர்களது வீட்டின் முன்பாக இருந்த போது எதிரி அங்கு வந்து அவர்களை பார்த்து அசிங்கமாக பேசி தனதுகையில் வைத்திருந்த கத்தியை வைத்து அசா1 ஐ இடது வயிற்றில் இடது பக்க மார்பபில் குத்தி இரத்தகாயத்தை ஏற்படுத்தினார் என்றும், அருகில் இருந்தவர்கள் சத்தம் போட்டு விலக்கவிட்டார்கள் என்றும், எதிரி செல்லும் போது அசா1 மற்றும் அவரது குடும்பத்தாரை பார்த்து உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார் என்றும், போலிச் விசாரணையில் கூறிவிட்டு எதிரி எனது தம்பி என்பதால் அதற்கு மாறாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.